ஓம் மகாகணபத்யே நம:

ஸ்ரீ ஜகந்நாத பண்டிதராஜ ரருளிய

ஸ்ரீ கங்காலகரி

மூலமும் - உரையும்.

இவை

தேவகோட்டை ம-ா-ா-ஸ்ரீ, அரு, அரு,
சோம, கல்கத்தாக்கடை ஏஜண்டு
K. சுவாமிநாதஞ்செட்டியாரவர்களின்
பொருளுதவியால்,

வேதாந்தபாஸ்கரரும்
நியாயசந்திரருமாகி விளங்கும்
ஸ்ரீ வீரசுப்பய்ய சுவாமிகள் அவர்களால்

சென்னை
ஸ்ரீ கணேச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றன.

1918.

—

விலை அணா 2.

உ

ஓம் மகாகணபதயே நம:

ஸ்ரீ ஜகந்நாத பண்டிதராஜ ரருளிய

ஸ்ரீ கங்காலகரி

மூலமும் - உரையும்.

இவை

தேவகோட்டை ம-ா-ா-ஸ்ரீ, அரு, அரு,
சோம, கல்கத்தாக்கடை ஏஜண்டு
K. சுவாமிநாதஞ்செட்டியாரவர்களின்
பொருளுதவியால்,

வேதாந்தபாஸ்கரரும்
நியாயசந்திரருமாகி விளங்கும்
ஸ்ரீ வீரசுப்பய்ய சுவாமிகள் அவர்களால்

சென்னை
ஸ்ரீ கணேச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றன.
1918.

விலை அணா 2.

உ

ஓம் மகாகணபதயேநம:

ஸ்ரீ கங்காலகரி

மூலமும் - உரையும்.

மங்கலம்.

சிந்துரவதன! செல்வச்சிறுவ! நின் றிருத்தாள் சேர்ந்த, மந்திரமுனிவர் பொற்றுண் மகத்துவத் தூளியன்றோ, புந்தியிற் புகுந்தகங்கை பொலங்கழல் போற்றுமாறு, சுந்தரத் துணைதானல்ல சொல்வள னீவதற்கே.

மங்கலம்.

நிகிலவுல கங்களுக்கு மிகவழகைப் பொழிசீர் நிகழ்த்துவதற் கரிதாகி யாட லென வெளிதாய், நிகிலமுழுவதும் பயந்த கண்டபர சடையோன் றிருமல

மன் மகத்தான செல்வமுமே யாகி, நிகமமுறும் விழுப்பொருளாய்ப் பொருணிறைந்த சுரர்க்கோ நித்தியமெய் யுடையதிருப்புண்ணியமே யாகும், நிகரறுநல் லமுதமென நிறைந்த சவுந்தரிய நின்சலில மமங்கலத்தை நீக்குக வெந்தமக்கே.

(உரை.) ஹே கங்காதேவியே! சகல புவனங்களுக்கும் அபாரமான அழகைத்தரும் உரைத்தற்கரிய சிறப்பையுடையதும், விளையாட்டாகச் சகல வுலகங்களையும் படைக்கும் பகைவரைத் துடைக்கும் பரசுடைய ஸ்ரீமந் மகாதேவரது அபரிமித செல்வமும், வேதம் புகழும் நிறைதனமும் தேவர்களுடைய சரீர சகிததருமமும், அமுதம் போலும் சௌந்தரியம் நிறைந்ததும் ஆகிய உன்னுடைய தீர்த்தமானது எங்களுடைய அமங்கலத்தை நீக்கி மங்கலஞ் செய்க. (1)

[பிரவாக ரூபமாகத் தீர்த்தத்தைப் புகழ்ந்து தங்கருத்தை வேண்டிக்கொளல்.]

2. வறியவர் வறுமை தன்னையு மலின வாதனை யுள்பவத் தினையுஞ், சிறிதொரு முறையும் விழிநெறி படரச் செய்மையிற் செய்தது விரைவில், செறி யறி யாமை மரமறத் தீக்கைத் தேசிக ரெனுநின தறலின், உறுபிர வாக மிஃ தளவிலதா முயர்விவண் செய்கவெந் தமக்கே.

(உரை.) ஹே மந்தாகினியே! தரித்திரர்க ளுடைய தைன்னியத்தையும், துர்வாசனை யோடுகூடிய மனத்தினர்பாவத்தையும்அவர் ஒருமுறை தரிசித்தமாத்திரையானே அதி விரைவில் அதிதூரத்திற்போக்கி,அவ்வாறே அவித்தைமரங்கெட வுபதேசிக்குந் தேசிக ராய்வரும் உனது வாரிப் பிரவாகமாகிய இது இங்கு எங்கட்குக் கணக்கற்ற மேன் மையைச் செய்விக்கவேண்டும். (2)

[தாங்கவடிவமாகத் தீர்த்தத்தைப் புகழ்ந் து ஆசீர்வதித்தல்.]

3. அரன்வெளிக் கபடங் கண்டுதிய ருக்க னனையவைவங் கரனனை கடைக்கண்

டிரமுறக் கணங்கொள் கலக்கமிக் கரன்
றன் றிருமுடி தனிலலே வணவாஞ், சுர
நதி சுரந்து பரந்தெழு மலேகள் சுந்தரி
நின்பதம் பரவும், நரகுறு பவத்தைட
பயத்தினே யகற்றி நண்ணுக வெனக்கரு
டாயே

(உரை.) அடியேனுக் கருளுந்தாயே !
ஸ்ரீமந் மகாதேவரது வெட்ட வெளியான
வஞ்சகத்தை நோக்கி ஸ்ரீகணேசப்பெருமா
னது அன்னேயின் உதயமான சூரியனேப்
போற் சிவந்த கடைக்கண் சிறிது நிலேபெற
வே சிறிது நேரம் இருதயத்திலுண்டாய
கலக்கம்மிகுந்து சிவபிரான் றிருச்சிரசில்
வாடியாடும் நின்னிடத்தி னின் றுமுண்டாய
அலேகள், உனது திருவடியைப் பணியும்
அன்பர்களுடைய பாவத்தையும் பயத்தை
யும், போக்குக. (3)

[நின்னேப்பற்றி யான் எல்லாத்தேவரை
யுந் துரும்பென நினேந்தேன், இப்போது
நீ யெனக்கருள்செய்ய உபேக்ஷிக்கின் யான்
யாவர்முன்னழுவேன் எனல்.]

4. ஆதர முனைக்கொண் டிலங்கதி கருவ னாகியே யாய்விலா தமர, ரோதனை வரையு மவமதித் திருந்தே னுன்பதம் பரவுமிப் போழ்து, நீதிருக் கருணை செய்திலை யாயின் நிமலபா கீரதி யமுதே, ஆதர விலனா னம்மையே யந்தோ! அழுவதிங் கெவர்முனே யறையாய்.

(உரை.) ஹே பாகீரதியாகியதாயே ! நின்னைச் சரணாகதியாய்ப்பற்றி விளங்காநின்ற மிகக் கருவங்கொண்ட யான் விசாரஞ்செய்யாமல் எல்லாத் தேவர்களையும் அவமதித்தேன் ; இப்போது நீ கருணை செய்யாமற் கைவிட்டு விடுவையாயின் ஆதாவில்லாத யான் அந்தோ யாவர்முன் சொல்லியழுவேன். (4)

[மீண்டும் பிரவாக ரூபத்தை நினைந்து பாவ நீக்கத்தைப் பிரார்த்தித்தல்.]

5. அறஞ் செயாக் கொடிய ராயினு நினைக்கி னருக்கனல் லொளிக்குழு விருளைப், புறஞ் செயல் போல வுள்ளிருள் போக்கிப் பொன்னுல கெவருமே போற்

ற்ற, நிறஞ் செயு மறலின் வடிவமாய்
நிகழு நின்றி ரு வெள்ளமெய் மூர்த்தம்,
இறைஞ் செனதுளத்தின் றழலையும்
பாவவினத்தையுங் குனித்தரு ளுகவே.

(உரை.) ஹே மந்தாகினித்தாயே ! புண்ணிய மியற்றாத மகாபாதகராயினும் சிந்திக்கின் சூரியனது கிரணங்களின் கூட்டமானது அந்தகாரத்தை நீக்குவதேபோல மனதிலிருக்கும் அஞ்ஞானத்தை நீக்கிச் சகல தேவர்களானும் பூசிக்கத்தக்க அழகுபொருந்திய நீர்மயமாகிய பிரவாகரூப நின் றிவ்யமங்களமூர்த்தம் நின்றிருவடியையே தொழு மெளியேனுடைய மனத்தாபத்தையும் மன. வாக்குக்காயங்களாற் செய்யப்பட்ட பாவத்தையும் நீக்கியருளுக. (5)

[இராஜ்யத் தியாக பூர்வகமாக நினது கரையில் வசித்து நினது தீர்த் தத்தைப் பானஞ்செய்தலா லுண்டாமானந்தம் தன்னினுங் குறைந்த இன்பமாகிய மோக்ஷத்தைப் பரிகசிக்கின்ற தெனல்.]

6. எனைத் தருந் திருவே ! யெறிகடலாடை யிம்பரைப் புரந்தமன் னவரும்,

தனித் துரும்பென முற்றினும் விடுத்தரி
யாற் சலிக்கும் வஞ்சிக் கொடி படர்ந்த,
பனித் திருக் கரையிற் றவம்புரி பவ
ராய்ப் பன்னமு தினுமிகு சுவைகான்,
றினித்தநன் னீரைக் களம்வரை மாந்த
வெழுஞ் சுக நகைக்குமுத் தியையே.

(உரை.) என்னை யீன்றருளிய மாதாவே! கடல்சூழ்ந்த பூவுலகை யாண்ட மன்னவர் தமதரசியிற்கையைத் துரும்பென விகழ்ந்து அத்தியந்தம் விடுத்துக் காற்றுலசைந்தாடும் வஞ்சிக்கொடிகள் சூழ்ந்து நிறைந்த நினது குளிர்ந்த கரையில் தவம்புரிபவராகித் தேவ அமுதினும் அதிக சுவையோடுகூடி யிரா நின்ற மிக நின்மலதீர்த்தத்தைத் திருப்தி யாகப் பானஞ்செய்தலாலுண்டாம் இன்பம் மோக்ஷஇன்பத்தை நகைசெய்கின்றது. (6)

[நேரே, தான் தீர்த்தமாடாவிடினும் நின் பால் மற்றொருசம்பந்தத்தால் தன்னவயவம் வீழின் அவைகட்கும் மேலான வுலகஅடை வுண்டாமாயின் நேரேதீர்த்த மாடுபவர்க்குக் கூறவேண்டிய தென்னே யெனல்]

7. அன்னேயே புலரு முன்னரே தீர்த்த மாடிடு மரச சுந்தரிக, ளுன்னதத் தனத்தின் மன்னுமான் மதந்தா னுன்னுடன் விரவிய கணமே, அன்னவைகவின்வைமா னிகர்நூ ருடாயிரக் கணக்கினர் சூழப்,பொன்னுடல்படைத்தின் னந்தன வனத்திற் புகுந்திடு மிச்சையின் வயமே.

(உரை.) ஹே மாத! சூரியோதய மாகு முன்னரே தீர்த்தமாடும் இராஜ சுந்தரிகளின் மலைபோன்ற முலைமேல் அணிந்திருக்கும் கஸ்தூரிமுதலியவை நினது தீர்த்தத்திற் கலந்த அந்தக் கணத்திலேயே, அக் கஸ்தூரிமுதலியவற்றைக் கொடுத்தமிருகங்கள், அழகிய விமானத்தில் வரும் நூறுயிரக் கணக்கான தேவர்கூட்டம் சூழப் பொன்னுடலுடனே சிறப்புப்பொருந்திய இந்திரனது நந்தவனத்திற்புகுந்து இச்சைப்படி சஞ்சரிக்கும். (7)

[ஒருமுறை நினைத்தபோதினும் மனச் சாந்தியையும், ஒருதரங் கானஞ்செய்தமாத்

திரையானே பாப சமுசார தாப நீக்கத்தை யும் செய்விக்கும் கங்கையென்னும் பதம் மரணசமயத்தில் எனது முகத்திலுலவுக வெனல்].

8. ஒருமுறை நினைந்த போதினு முளத்தை யொள்ளிய சாந்தம தாக்கி, யொருமுறை பிரிய கானமே புரியி னெல்லையி லவம்பவக் கனநீர்த், தருள் செவி மடுப்பவாநந்தந் தருவ தாகிய சங்கையென் பதந் தான், மரணம துறு மப் பொழுதினி தாக மரைமுகத் துல வுக தாயே!

(உ-ரை.) ஒருதரம் நினைத்த போதிலும் மனச்சாந்தியையும் ஒருமுறைஅன்போடுஞ் சபஞ்செய்யில் விரைவாகப் பாவத்தை சமு சார தாபத்தைத் தவிர்த்தலையும் செய்வித் தருளா நின்றதும், கேட்டமாத்திரையானே செவிக்கும் மனதிற்கு மின்பந் தருவதும் ஆகிய கங்கையென்னும் பதமானது உயிர் போகும் பொழுது இனிமையாக எனது வதன தாமரையின்கண்ணே உலவிக்கொண்

டிருக்குமாறு, ஹே அன்னையே நீயருளல் வேண்டும். (8)

[இந்திராது உத்யான வனத்தைக் குறித்துக் காகங்கட்கும் மிகப் பிரியமாகிய நினது கரை யெனது சிரமத்தை நீக்கு மாற்றலுடைய தாகுக வெனவேண்டல்.]

9. எக்கரை யிடையி லாடிடுங் காக வினமிக மகிழ்வன வாகிச், சொக்கவிந் திர ரினகரவா வுளத்திற் றொடர்புறு வசித்தலா னுலகர்க், கிக்கரு வடைதன் மரித்திட லிடரை யெய்திடன் முதலன வேகும், அக்கரை நினதிங் கெனதிளைப் பகற்று மாற்றலை யடைகுக வனையே.

(உரை.) ஹேதாயே! எந்தத்தீரத்தின் மத்தியில் விளையாடாநின்ற காகக்கூட்டம் அதிக சந்தோஷத்தோடு கூடினவாகி; இந்திரது நகர இச்சையையு முள்ளத்திலடையமாட்டாவோ, எக்கரையின்கண் வசித்தன் மாத்திரையானே உயிர்கட்கு ஜனனமும் மரணமும் சோகமும் அடையமாட்டாவோ, அத்தகைய மகாமகிமைவாய்ந்த நினது தீர

மானது ஈண்டு என்னுடைய சிரமத்தை நீக்கும் சமர்த்துடையதாகுக. ஒருகால் விமானத்தில் வந்த இந்திரர் ஸ்ரீகங்காதீரத்தில் விளையாடும் காகங்களை நோக்கி நீங்கள் விளையாட என் னந்தன வனத்திற்கு வாருங்கள் என அழைப்ப நாங்களிவ்விடத்திலேயே வசிப்போம் உமது வனத்திற்குவரோம் என்றன வென்பது ஸ்ரீகங்கைபுராணத்தின்கண்ணே வெளியாம். (9)

[யாவினும் மேலாயதும், வேதாதி யகோசரமும் ஆகிய பரமசிவத்தை விடுத்து நீ வாஞ்சித்தபயன் பெறுவதற்கு என்னையே யேன் றுதிக்கின் றனையெனின் ? அத்தகைய சிவம் நீயேயாவாய் வேறு விடயங்களல்லை யெனல்.]

10. நேருறை மறையு நிகழ்த்திடா
விருமை நிகழ்ந்திடா நிகிலரின் மனமு,
மோருரை யதுவுந் தொழில் செயாத்
தூய வோருரு வின்றியே யழியாப்,
பேரறு .மெதுதன் மகிமையாற் றமத்
தைப் பெயர்த்திடும் பெருஞ்சுர ரமுதே,

யேருறு மதுநீ யேயல திகழு மிவ்விட
யக்கடு வலேயே.

(உரை.) சாக்ஷாத்வேதமும் கூறவொண்ணாததும், பேதம் சிறிதுமில்லாததும், சருவ உயிர்களின் மனவாக்கு வியாபாரங்கட்கு அவகாசமற்றதும், பரிசுத்தமாயதும், ஆகாரமற்றதும், நித்தியமாயதும், பெயரற்றதும் ஆகிய எவ்வத்துத் தனது சுயம்பிரகாச மகிமையானே அஞ்ஞானத்தைக் கெடுக்குமோ, அவ்வழகியவத்து, ஹே சுராமுதமாகியதாயே! நீயேயாவாய், அஃதலாமல் இவ்விடயவிடங்கள் நீயாகாயெனல் திண்ணம். (10)

[யாவருக்கும் பொதுவாக அத்தியந்தங் கிடைக்காததாகிய ஸ்ரீ விஷ்ணு பதத்தைக் கொடுக்கும் நீ எவரோடு முவமிக்கப்படமாட்டாயெனல்.]

11. அரிய தானங்க டம்மிஞ னிட்டையா லரும்பல மகத்தானும், பெரிய வச்சஞ்செய் நிருமலத் தவந்தமாற் பெற்றிட முடியாத, விரியுஞ் சிந்திய மின்றிய விண்டுவின் வியன்பதந் தனைத்

தாயே, சரிய தாகவீ யெவரொடிங் குவ
மிக்கத் தக்கவ ளருணீயே.

(உரை) மகத்தாகிய தானங்களானும், தியா
னுதிகளானும் அரிய பெரிய பல்வகையாகங்
களானும், பார்க்கப் பயங்கரமாகிய நின்மல
மான தவக்கூட்டத்தானும், அடைவதற்கரு
மைத்தாய, அசிந்தியமாய, ஸ்ரீ மகாவிஷ்ணு
வின் பதத்தை யாவருக்குஞ் சமானமாகக்
கொடுக்கும் உன்னை, ஹே அன்னையே!
இங்கு யாவரோடு உவமிப்பது எங்கட்குத்
தெரியவில்லை நீயே கூறுவாயாக. (11)

[தரிசனமாத்திரையானே நரர்க்குச் சமு
சார பயத்தைக்கெடுக்கும் நின்னை ஸ்ரீபரம
சிவன் ஸ்ரீபார்வதி தேவியாரின் அனுகூலத்
தியாகவாயிலாக நிரந்தரம் திருமுடியிலேயே
வைத்தருளியுள்ளாரெனல்.]

12. கண்ட மாத்திரை யானுமே நரர்க்
குறுங் கடும்பவப் பய நீக்குங், கொண்
ட கோபத்திற் கோணிய வுமைக்கனு
கூலமேல் விடுநீல, கண்டன் சீர்சிரத் தி
டையறத் தரித்திடுங் கவினின் மெய்

மகி மாவை, விண்டு பேசுவ ரெவரிவண்
மங்கல விமலையே யெம தாயே.

(உரை.) தரிசித்தமாத்திரத்தானுமே நரருடைய சமுசாரபயத்தை நீக்கியருளுவதும் ஸ்ரீபார்வதிதேவியார் மனதிற்கொண்ட கோபத்தானேவதனஞ்சுருங்கியும், அவர்க்குயர்வாகிய அனுகூலஞ் செய்வதைவிடுத்து ஸ்ரீ நீலகண்டராகிய எந்தை தமது திருமுடியில் நிரந்தரம் வைத்தருளுவதும், ஆகிய நினது மங்கலமூர்த்தத்தின் மகிமையை யாவரே யெடுத்துரைப்பவர்? (12)

[உன்மத்தாதிகளானும், இகழத்தக்கனவும், பரிகசிக்கத்தக்கனவும், கூறத்தகாதனவும் ஆகிய பாவங்களையுங் கெடுப்பவள் நீயேயெனல்.]

13. பித்தரு மிகவு மிகழ்வன பதிதர்
பெரிதொறுப் பனவிரத் தியரும், ஒத்
துரை தருவ வல்லனபுளகத் துடன்விடு
வனபுற முரைக்கு, மத்தரு மளவி லுல
கரி னளவின் மறங்களைத் தினஞ்சலிப்
பிலாம, லித்தரை யிடையி லொருத்தியே
நீக்கி யிலங்குவை யென்குறை பெரிதோ.

(உரை.) உன்மத்தர்களாலும் மிகவுமிகழப் பட்டனவும், கீழோராலும் நீக்கத்தக்கன வும், பாமரராலும் பகரத்தகாதனவும் புறங் கூறுவோராலும் மயிர்ச்சிலிர்ப்புடன் விட் டொழிக்கப்படுவனவும் ஆகிய அளவில்லாத வுலகரின் அளவில்லாத பாவங்களை நாடோ றும் மனம்வெறுக்காமல் இப் பூவுலகின் கண்ணே நீயொருத்தியே நீக்கி விளங்கு கின்ற னையாதலின், என்னன்னையே! எனது பாவ முனக்குப் பெரிதோ. (13)

[மண்ணின் கண்ணே இடர் களையும்பொ ருட்டுச் சுவர்க்க வுலகத்தினின்றும் இறங்கு முன்னைச் செஞ்சடையிற்றரித்த சிவபெரு மான் நிர்லோபராயிருந்த போதினும் உன்னை மறைத்தலானே லோபியாய் விட்டமையின் நின் குணங்கட்கிஃதே ஒருகுறையுள தெ னல்.]

14. வானுலகி னின்றிடர் களைந்திட வும் வந்தனை யிம்மண் ணுலகினீ, கூனி லவு செஞ்சடையின் புஞ்சமுடி கொஞ் சுதிபுரஞ் சிதைவரான்,கோமெனது விரும்

பிலரு மம்பவுள் விரும்புறவு கொண்
டவதனுன்,சானவி களங்கமிது பொங்கி
நிழ றங்குன குணங்க ளினவே.

(உரை.) ஹே!சானவியென்னு மம்மையே! தேவருலகி னின்றும் அவனிதலத்திற்கு சோகத்தை நீக்கும்பொருட்டு இறங்கிவந்த போது, புரமெரித்த சிவபெருமானுல் சடா சூடக்கட்டிலகப்பட்டு நன்குகட்டுப்பட்டனை யாதலின் நிர்லோபத்தை யுடையவர்மனத் தும் உலோபத்தினை யுண்டாக்கும் நினது குணங்கட்கே இத்தோடம் உண்டாகியிருக் கின்றது. (14)

[யாவரையுங் காப்பாற்றும் ஆற்றலையு டைய பரம ஔஷதம் நீயே யாகின்றனை யெனல்.]

15. செடரொடு குருடர் நொண்டி
யர் பிறவிச் செவிடர்க ளூமையர் கோ
ளாற், படர்தரப் படுவர் பாவமே மிகுத்
துப் பாறிட வழிபெறுர் தேவ, ரிடர்
கெட முடியா தெனவிடப் படுவ ரிழிந்
தவர் நரகினி லிவரைத், தொடரிவண்

புரப்பப் பரமமெய் மருந்தாய்த் தோன்
றினை யன்னைநீ போற்றி.

(உரை.) அறியாதவர், கண்ணில்லாதவர், காலில்லாதவர், பிறவிச்செவிடர், ஊமையர், நவக்கிரகபீடையுற்றவர், மகா பாதகங்களதிகரித்து அவற்றையகற்ற வழியற்றவர், தேவர்களால் இவர் தம்இடரைக் கெடுக்க நம்மான் முடியாதெனக் கைவிடப்பட்டவர், எரிவாய் நரகில் விழுந்தவர் என்னும் இத்தன்மையரைக் காப்பதற்கு இவ்வுலகில் உயர்ந்த மருந்து நீயாயிருந்தனையாதலின் உன் பாதமே கதியெனப் போற்றுவோம். (15)

[கபிலமுனிவரது சாபத்தினலே சாம்பராகிய சகரஅரசரின் மைந்தராகிய சாகரர் நினது சம்பந்தவயத்தால் சுவர்க்கத்தில் திவ்ய தேகங்களைத்தரித்து இன்றும் நினது மகிமையை, "அகோ அகோ தன்மை! வாழி நீடூழி ஜானவித்தாய், அழிந்துபோன எங்களை தமது திருக்கரத்தாற்றீண்டி இத்தகைய பாக்கியத்தில் வைத்தனளன்றே" என்பதாக நாடோறுந் துதிக்கின்றுரெனல்.]

16 இயற்கையிற் றெளிந்து சகசசீ தளமா யெழில்செய்நின் புனலினைச் சகரர், புயற்கிறை யுலகிற் புக்கிருந் திரி யாப் பொன்னொளி மேனிய ராகிச், செ யற்கையை நினைந்து மிகுபுள கிதராய்த் தினமினு மகிழ்வொடும் புகழ்வர், அய ற்கரை யறுமவ் வறையொணு மகிமை யவனியின் மலர்ந்திடு மன்னையே.

(உரை.) ஹே அம்பிகையே சுபாவ மாகவே நிருமலமாகிச்சகஜமாக சீதளமாகிய உனது தீர்த்தத்தை, மேகநாயகராகிய இந்தி ரரது உலகம் புகுந்திருந்து வாழ்பவரும், கெடாத பொன்னொளி மேனிபெற்றவரும், அப்புனல் செய்த செயற்கையை யெண்ணி மிகவு மயிர்க்கூச்செறிதலை யடைந்தவரும் ஆகிய சகரராஜாவின் மைந்தர் மகிழ்வோடு மின்றும் புகழ்கின்ற யாதொரு கரையு மில் லாத கூறுதற்கரிய அந்தினது மகிமையா னது இப்பூமண்டலத்தில் ஜெயம்பெற்று விளங்குகின்றது. (16)

[அற்பப் பாபியரின் பாப நீக்கப்பொரு ட்டு மூவுலகிலும் அநேக தீர்த்தங்க ளிருக்

கின்றன; பிராயச்சித்தமின்றிய மகா பாதக தோடத்தை நீக்குவதில் நினக்கொப்பாய் நீயே யாவாயெனல்]

17. செயற்பினர் விரைவிற் செங்க னல் பரப்புஞ் சிந்தையர் சிறியபா விய ரை, யுயப்புரி நதிகள் பலவுள மூவிவ் வுலகினின் மாற்றிடு நெறியே, அயற் பிற வாம லஞ்சுபா வியர்தம் மகங்கெட வளிப்பவ ரமையே, கயற்பொலி யுனை யொத் துன்னையே யலது கவின்பெற விளங்குவ ரெவரே.

(உரை.) ஹே உலகீன்றதேவியே! பாவ ஞ்செய்த பின்னுடனே மனமனவிட்ட புழு வேபோற்றபிக்குஞ் சிறிய பாவியரைக் காக் குப்பொருட் டிந்த மூன்றுலகத்தில் அநேக தீர்த்தங்க ளிருக்கின்றன; ஆனால் யாதொரு பிராயச்சித்தமுஞ் செய்யமுடியாத கொடிய பாவமுடையவர் தம்பாவம் போக்கிக் காத்த ருள உன்னைப்போல நீயேயாவாயல்லாமல் வேறுயாவருள்ளார். (17)

[அநேக குணங்களோடு கூடியிருக்குந் தகைமையானே பாவத்தைமாற்றும் ஆற்ற லுற்ற நினது திருமேனியானது எனது பாவத்தையும் ஏகுமாறியற்றுக வெனல்.]

18. புண்ணியந் தமக்குத் தானமா யெஃதோ புதிதுகாண் முதர்தமக் குதவி, யொண்ணதி தமக்குண் முக்கிய மாய்மூன் றுலகினுக்கமலமார் கலையாய், நுண்ணிய மதியிற் கற்பனை நாறி நுண ங்கிய மதிக்கரி தாகி, புண்ணிதி யளித் துக் காக்குமுன் மேனி யொருங்கென தகமகற் றுகவே.

(உரை.) தருமங்கட்குத் தானமும், புதி தாகவந்து தரிசனம் புரிபவர் மனத்திற் சொல்லமுடியாத அற்புதத்தை விளைவிப்ப தும், தீர்த்தங்களுக்குள் முக்கியமும், மூவுல கினுக்கும் நிருமலமாகிய வத்திரம்போன்ற தும், மதிக்குச் சமாதானஞ் செய்விப்பதும், குமதிக்குத் தரிசனமாத்திரமுமிலாது மறை வதும், இலக்குமியைத் தேடித் தருவதும், ஆகிய உனது திருமேனியானது எனது தாபமாகிய பாபத்தை யகற்றியருளுக. (18)

[காரியப் பற்றுனே நினது பிரிவுண்டா யது, இஃதென தபராதமேயாம் எனல்.]

19. தனநறை மாந்திச் சுழல்விழி யிறைவர் தங்கண்முன் னேடிமிக்கோடி, யின்வனற் கொடிய துயருழன் றநிச மிருக்குமென் னுடையதே மாசா, மெனதிதஞ் சதங்கொன் றுணர்விலா மதிய னெழின்மிகு நினேப்பிரிந் திருந் தேன், இனியிறை யேனுந் தயைசெயல் வேண்டு மென்றனே யீன்றவ ளன்றே ?

(உரை.) திரவியமாகிய கள்ளைக்குடித்துச் சுற்றுநின்ற கண்களையுடைய மன்னவர் முன்பாகக் கைகட்டியோடியோடி அநேகங் கொடுந்துயரடைந்து நிரந்தரம் வாடுமெனது தோடமேயிதுவாகும்; அடியேனுக்குக் கிடைக்கும் அநேக இதங்களையுமிழந்து அவிவேக மதியனுகிய யான் அழகுபொருந்திய உன் னைப் பிரிந்திருந்தேனன்றே ! இனிக் கண மேனும் தயைபுரிய வேண்டும், நீ யென்னைப் பெற்ற தாயல்லவா ? (19)

[முன்னர் தயை செய்யவேண்டு மெனப் பட்டது இப்போது எவ்விடயமாகிய தயை யென அவாவின் நின்தீர்த்தமானது அடி யேனது மறுபிறப்பையே தூரத்ததாக்குக வெனப் பிரார்த்தித்தல்.]

20. வாயு லீலைசெய் லோல லகரியால் வாச லீலை கொள் வாரிச ராசியீ, தூய தூளியி ராசி கண்மே னியிற் றேய நீடொளிக் குங்குமக் காந்திசேர், தாயர் வானவர் தந்தனந் தந்தகார்ச் சந்தனக் குழம்பாற் சடிலப்படுஞ், சாயை சை வலஞ் சார்நின தந்தணீர் சன்ம சால மெனதறச் சாடவே.

(உரை.) வாயுவினுடைய விலாசத்தானே சஞ்சலப்படும் அலைகளால் அலையுந் தாம ரைக் கூட்டங்கொட்டும் மகரந்தங்கள் திரு மேனியிற் றேயப்பெற்று விளங்காநின்ற குங்குமப் பிரகாசத்தோடு கூடியதும், வா னுலகத்திருக்குந் தாய்மார்கள் மார்பிலணிந்த கருஞ் சந்தனக்குழம்புகள் வீழ்ந்து சேறுக இருப்பதும், படர்ந்த பாசிகள் நிறைந்ததும்

ஆகிய நினது குளிர்ச்சிபொருந்திய தீர்த்தம் எனது ஜனனக்கூட்டத்தை முற்றினும் நீக்கியருள்க. (20)

[உற்பத்தி வாசத்தான விசேடத்தானும் தொழில்விசேடத்தானும் உலகைக்குறித்து உனக்கு மேன்மையுளதெனல்.]

21. உதயமோ பதுமை முதன்பத பதுமவொலி மலமில நகமிருந்தாம், வதிதலோ மதன்றன் மதனன் செஞ் சடையில் வனைதரு புனிதமேன்மாடி, அதனொடு பதிதரவர் தமைப்புரத்தல கர்நிசந் தொழிலிதுவாயின், எதுதனு லுலகினின்று நின்மேன்மை யெழில் பெறு திருந்திடுந் தாயே.

(உரை.) இலக்குமியோடு இரமிக்கும் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பாததாமரையின் புகழும் நிர்மல நகங்களினின்றும் உண்டானாய், மன்மதனைப் பொடிசெய்த கருணாநிதியின் செம்பவளச் சடையின் கட்டாகிய மேன் மாடிவீட்டில் வாசஞ்செய்கின்றாய், பிராயச் சித்தஞ்செய்யமுடியாத மகாபாதகர்களையும்

கடைத்தேற்றுவதே தொழிலாக இருக்கின்ருய்; ஆகையால், எக்காரணத்தாலுலகினின்றும் உனது மேன்மை யழகுபெருதிருக்கும்; மற்ருே, தாயே! அவசியம் அழகுடையதேயாம். (21)

[சிவசிரசிலிருப்பவளும், மாதவன்பாதத்திலுதித்தவளுமாகிய நினக்குவமையாக எந்நதியும் இல்லையெனல்.]

22. மலேதனிலிருந்து மலர்ந்திடுமள வின்மாநதி தம்மினுட் புரத்தை, யில கெரிவிருந்து செய்தவன் சடையிலிடங் கொடுநின் றதிங் கெதுதான், அலேமகள் கொழுந னம்புயத்தாளே யம்பினு லலம் பிய தெதன்கண், டிலகபண்டிதர் நிற் றலேயிறை தருவர் திவமுறுஞ் சிவை யெனு மனேயே.

(உரை.) பர்வதங்களி னின்று முண்டாகி வராநின்ற அளவில்லாத நதிகளுக்குள் திரிபுர தகனன் செஞ் சடையில் வசிப்பது யாது? இலக்குமி நாயகருடைய பாததாமரையைத் தீர்த்தத்தால் அலம்புவதுயாது?

எதன் கண்ணே நின துவமானஞ் சிறிது பண்டிதர்களாற் கொடுக்கப்படுமோ! ஹே தாயே! அத்தகைய மகிமை வாய்ந்ததே கிடையாது. (22)

[ஹே தாயே! மனோரதங்களைக் கொடுப் பவள் நீ யிருப்பப் பிரஹ்மாதி தேவதை களாற் பயனேயின் றெனல்.]

23. சங்கையற்றெலையில் சமாதியை விதிதான் சந்ததஞ் செய்குக வரிதான், பொங்கர் வதனிற் றுயிலுக வினிதாய்ப் பொதுவினி னிரந்தர நடனம், இங் கரன் புரிக மாற்றிடும் வினைக ளியற்ற லென் றவமகந்தானந், தங்குல கனைநீ விழைவுகள் விளைத்துத் தரணியில் விழித்திருந் திடவே.

(உரை) பிரஹ்மாவானவர் சங்கற்பமே துவு மில்லாமல் நிருவிகற்ப சமாதியிலேயே யிருக்கலாம், ஸ்ரீமகா விஷ்ணுவானவர் ஆதி சேடன் மேற்கவலை யில்லாமற் றுயிலலாம், எந்தையோ சிற்சபையில் சந்ததம் ஆனந்த நடனமே செய்க, பிராயச்சித்தங்களும் தவ

மகதானங்களும், செய்யவேண்டுவதுதான் என்னிருக்கின்றது; ஹேமாதாவே! நீ யிவ்வுலகில் விரும்பி யவற்றையெல்லாங்கொடுப்பதற்குச் சாக்கிரதையா யன்றோ இருக்கின்றாய். (23)

[தீனன் என்பதாதி விசேஷணங்களோடு கூடிய யான், நேயமிகநிறைந்தவள் நீயென்பதாதி விசேஷணங்களோடுகூடிய நின்னையடைந்தன னாதலின் நீ நின்பெருமைக்குத் தக்கவாறு செய்தருளெனல்.]

24. தீனனு னேய மிகநிறைந் தவணீ திக்கிலன் சிவபதந் தருவோ, யினனுனுலகை யேற்றவை பிணியா லிடருவன் சித்தர்மெய் மருந்தே, பானமே விரும்பி யரும்புளனமுதப் பரவையாய் குழவியா னனைநின், வானுலாம் வனசம் வணங்கிவந் தனனல் வழங்குதி வரஞ்சிறு வனுக்கே.

(உரை.) யான்றீனன், நீயோ நேயமிகவும் நிறைந்தவள்; திக்கற்றவன் யான், நீயோ சிவபதங் கொடுப்பவள்; யான்தாழ்

ந்து வீழ்பவன், நீயுலகை யீடேற்றுபவள்; நோயால்யான் துன்படைந்தவன், நீயோ சித்தர் மருந்தாயிருக்கின்றாய். தாகத்தாற் றகிக்கப்பட்டுத் துயருறு மனத்தன்யான், நீயோ அமுதக்கடல்; தாயாகியஉன்னைக் குழந்தையாகிய யானடைந் துளேன் ஆதலின், நல்ல மேன்மையை நாயடியேற்குநல்குவாயாக. ()

[எதுமுதற்கொண்டு நினதுகதை பூலோகத்திற்கு வந்ததோ அதுமுதலாக எமபுரிக் கலகலப்பு ஒழிந்து போயிற்று, யமதூதரோ தூரதேசஞ் சென்றுளார், விமானங் களோ தேவவீதிகளைச்சிதறடிக்கின்றன வெனல்.]

25. நமன்புரிக் கோலாகலநிறைவொடுங்கி நடந்தனர் சேய்மையிற் றூதர் சுமடரெங்கேனு மிறப்பதைத் தேடிச் சுவர்க்க வீதியை விமானங்கள், சமைவற நெருக்கி நிறைந்திடுந்தரணி தனினினதருள் வரவுறவே, யெமினருள் சுரந்த வெழிற்கலி யாணி யெங்கு நின் கதை நிகழ்ந்திடவே.

(உரை.) எமனுடைய பட்டணத்திற் கோலாகலமே நின்றுவிட்டது. எமதூதரோ தூரதேயத்தில் எப்பாவியாரிறப்ப ரெனத் தேடப் போய்விட்டார். நின்பால் ஸ்நானம் செய்பவர்களின் விமானங்கள் தேவவீதியில் நெருங்கி நிறைகின்றன, அடியேன் பேரிற் கிருபை வைத்தருளும் ஹேகல்யாணியே! இப்பூமியின் கண்ணே நீயெப்போது வந்தனையோ, உன்கதை யெவ்விடத்தும் எக்காலந் தொடங்கி நடக்கலாயதோ அப்போது மேற்கூறியவை மாத்திரந் தானோ நடந்தவை, அளவில்லா தனவாம். (25)

[நினது ஜலகணங்கள் காமக் குரோதத் தாலுண்டாய சுரத்தாற் றகிக்கப்பட்ட சரீரங்களையுடைய எமது சந்தாப சாந்தியைச் செய்தருளுக வெனல்.]

26. இலங்கிழி காமஞ் சினமிக மிகலா விருஞ்சுரச் சுடர்க்குவா லெரிப்ப, மலங்கெழு காய மருவெம தநிசமாற்றுதற் கரியசந் தாபம்,பலங்கிளர் வாயு வுற வெறி யலையின் பரம்பரை யெழுந்த

நீர்க்கணத்தி, னலங்கிளர் தேவ நதி நின
தணிகள் நகர்ந்திடப் புரிந்தரு டாயே.

(உரை.) விளங்காநின்ற இழிவாகியகாமம் கோபம் மிகவு மதிகமாகலால், பெருஞ்சுரத்தினது சுவாலையின் கூட்டத்தானே எப்போதும் எரிக்கப்பட்ட சரீரங்களையுடைய எமது கெடுக்கமுடியாத சந்தாபத்தை, வாயுவேகத்தா லுல்லாசமுற்ற திவ்ய நதியின் அலைகளின் பரம்பரையினு லெழுந்த நீர்க்கணவரிசைகள் மாற்றிவிடுமாறருள் செய்க.

[முன்னர் நீர்க்கணங்கள் சந்தாபத்தை மாற்றுகவெனப்பட்டது, இப்போது தாப மிகுதியாயிருத்தலினுனே கணங்கள் எவ்வாறு மாற்றுதல் கூடுமெனின், நினது தீர்த்தவெள்ளம் எமது தாபத்தைச் சாந்திப்படுத்துகவெனப் பிரார்த்தித்தல்.]

27. புவனமுற் றினுக்கு மின்பவீ
டதுவாய்ப் புகலுமிப் பிரமனு ரண்டந்,
தவழுறுந் தரங்கந் தம்மொடெப் புறத்
துந் தவழ்ந்திடு மெதன்கட் டும்பையை
ப்போற், சிவன்விரி சடைசெய் குடில்

படர் நினது சிந்துரப் புனற்பெரும் பாகந், தவமுற வெனது தாபமே தணித்துத் தயவுடன் காக்குக தாயே !

(உரை.) ஹே அம்மையே! சகல புனங்கவளுக்கும் இன்ப இல்லமென்னும் இப் பிரமாண்டம் அலைகடலோடுந் தும்பையைப் போலிங்குமங்குமா பெதன்கண்ணே யுருளுமோ அத்தகைய பரமசிவனது சடை மாளிகையில் வாசஞ்செய்யும் உனது செம்புனல் வெள்ளம், எனது தவம்வளரத் தாபநீங்கத் தயவாக அருள்புரிதல் வேண்டும். (27)

[ஹே குழந்தாய்! வேறுதீர்த்தங்களும், ஸ்ரீ மகாதேவர் முதலிய தேவதைகளும், இருப்ப அவரைவிட்டு என்னையே யேன் றுதிக்கின்ரு யெனின், தீர்த்தங்கள் என்னைக்காக்க வெட்கின்றன, ஸ்ரீ மகாதேவர் முதலியவரோ காதை மூடிக்கொள்ளுகின்றனர். நீயோ தாயாதலின் தயையினுனே என்னைப் புனிதனுக்கி அவர்களது பாபநாச அபிமானத்தை யழிப்பாயாகவெனல்.]

28. புகழ்பெறு நதிகள் விரைவினினேக்கிப் போவென வெட்கின வென்

தோ, ரிகழ்பவந் தவிர்ப்பச் சிவன்முதற்
றேவ ரிருசெவி புதைத்தனர் கரத்தால்,
நிகழுமிவ் வெனைநின் கரங்கொடு புனி
த நிகழ்த்திமற் றனைவரும் பவத்தை,
யகழ்தருந் தருப்ப மகற்றுதி யெனையா
ளளிவளர் குளிருளத் தனையே.

(உரை.) உலகிற் புகழுற்ற தீர்த்தங்கள் யாவும் மகாபாவியாய என்னைநோக்கி அதிவிரைவிற் போபோவென வெட்கமுற்றன; தேவரோஎனது ஒருபாவங் கெடுக்கவேண்டுமெனத் திருக்கரத்தாற் றிருச்செவியைப் பொத்திக்கொண்டனர். தயையேதிருமேனியாகிய அருட்சத்தியே! நீ தாயாதலின் அடியேனைப் புனிதனாக்கி, மேற்கூறியவர்க்குப் பாவத்தை யகற்றுவோமென்னுங் கர்வத்தை யகற்றுவிப்பாயாக. (28)

[அளவற்ற ஐயுறவானே பாபாசரணத்தினின்றும் நீங்கிய சண்டாள சமுதாயங்களாலும் விடப்பட்ட பாவக்கூட்டம்நிறைந்த என்னைப் புனிதஞ்செய்ய முயலும் உன்னைத் துதிப்பான் நரபசுவாகிய யான் எங்

னனம் ஆற்றலுடையவனுவேன் என அகங்
கார நீக்கவாயிலாகக் கூறல்.]

29. புலையர் தங் குழுக்க ளளவிலே யுற வாற் பொக்கென வகன்றவிட் டொழித்த, மலைதரு பாவக் குவிய லுக்கிடனாய் மடையனே ஞெருவனு யிருந்தே, யலையெனையம்ம! வருள்செய முயன்றிங் கருகுறு மன்னே நின் றுளின், கலையிசை யிசைப்ப வெங்ஙன மாற்றற் கதுவுவன் நரபசுக் கடையேன்.

(உரை.) சண்டாளர் கூட்டங்களும் அநேக சம்சயங்களடைந்து விரைவில் விட்டொழித்த பாவக்கூட்டங்களுக்கு இடமாக மடையனுகிய யானொருவனே யிருந்தே யலைந்தேன். அற்புதம்! அற்புதம்!! அத்தகைய எனக்கும் அருள்செய்யவேண்டும் என்றுத் தேசித்துவந்ததாயாகிய உனது திருவடியின் வேதம் புகழ்மகிமையைக்கூற நரபசுவாகிய நான் எங்ஙனஞ் சமர்த்துடையவனுவேன். (29)

[மகாமகாபாதகன் எவனேனு மொருவனைக்காத்து உலகிற்கு ஆச்சரியத்தை யுண்

டாக்கவேண்டும் என்றுனக்குப் பேரவாவி ருந்தது, அது இதுகாறும் அத்தகைய பெரும்பாதகன் கிடைக்காமையின் பூர்த்தி யாகாமலிருந்தது யானே அவ்விச்சையைப் பூர்த்திசெய்ய வந்துளேனாதலின் என்னைக் காத்தலால் உனதிச்சையை நிறைவேற்றிக் கொள்ளலாமென வேண்டல்.]

30. இத்துணை ஞான்று நெடியநாட் டொடங்கி யிமையந்தில னெவன்றனைப் புரக்கின், இத்தரை யூழி யற்புத நிறையு மெனும் விழை வுளந்தனி னெடுநாள், வைத்திருந் தனையின் றடைந்தன னடி யன் வளர்பயன்வழங்குற வெனையாள், சுத்தசிற் பரம சோதியே தாயே சுகந் தனை யுகந்திட வருளே!

(உரை.) நெடுநாண் முதலிது காறும், எவனைக் காத்தால் இவ்வுலகம் பல்லூழி காலம்அற்புதத்தை யடையுமோ அத்தகை யன் கிடைத்திலனே என்னும் ஆசை நின் மனத்தில்நெடுநா ளிருந்ததன்றோ, இன்றத் தகையனாகியயானடைந்திருத்தலின் என்னை யாட்கொண்டு இன்பத்தையீயின் நின்னாசை

பயனுடையதாய் விடும், சுத்த அறிவுவடி வாகிய ஜோதியாகியதாயே! இச்சமயத்தை விட்டுவிடவேண்டாம். (30)

[எனதநேகதுஷ்ட குணங்களைக் கேட் டுன்னையலது மற்றெவரும் எனது முகத் தையும்பாரார் எனல்.]

31. நாயென வுழன்று திரிந்தனன் பொய்யே நவின்றிடுந் தன்மையன் கு தர்க்கம், போயுறப் புரிவ னிரந்தரம் பிற ரைப் புறஞ்சொல் வெண்ணிநைந் திடு வேன், சீயெனு மெனது குணகண மித னைச் செவியினிற் பன்முறை கேட்டுத், தாயுனை யலது யாவரென் வதனந் தயை யுட னோக்கினர் கணமே.

(உரை.) ஹே தேவியே! நாயைப்போல நிரந்தரமலைந்து திரிவேன், பொய்யையே யெப்போதுஞ் சொல்வேன், எங்கும்போய்க் குதர்க்கமே செய்வேன், பிறரைப்புறங்கூறு வதற்காய சிந்தனையையே நிரந்தரஞ்செய் வேன், இத்தகைய கீழான எனது குணங் களைக் கேட்டுக்கேட்டுத் தாயாகிய உன்னை

யல்லாமல் வேறுயார் சகித்துக்கொண்டு என் முகத்தைப் பார்ப்பர்; உன்னையன்றி யொருவரும் ஒருகணமேனும் பாரார். (31)

[எம் மனுடனுடைய விழிகளானே பரம ரமணீயமான நினது திருமேனி பார்க்கப் படவில்லையோ, எவனது செவிகளானே நினதலைகளின் கோலாகலங் கேட்கப்பட வில்லையோ, அவனது விழிகளும் செவி களும் வீண் எனல்.]

32. நின்பரம ரமணீயத் திருமேனி தனைநிதமு நெகிழ்ந்து நாடாத், தன் பரந்த விழியானே தரணியின்கணென் னபயன் றாங்கலீலை, யின்பெரிய கல கலப்பைக்கேளாத விருசெவிகளிருந்து சியென், இன்பமறு மப்பிறவி பயனிலை யா லடியேனை யீன்ற தாயே.

(உரை.) ஹே என்னையீன்றருளிய அன்னையே! உனது மேலான அழகுவாய்ந்த திருமேனியை யுருகிக் காணாத கண்ணிவ் வுலகிலிருந்து பயனென்னே! அலைகளின் லீலைகளின் மிகுந்த கலகலப்பைக்கேளாத

செவியிருந்தும் சீசீ யென்ன பிரயோசனம்! அந்த ஆனந்த மனுபவியாத பிறப்பே வீணன்றோ. (32)

[புண்ணியம் பண்ணுவோர் விமானங்களி லிஷ்டப்படி அமருல கடைவர், பாவியரோ பரவயராகி நரகமெய்துவர் என்னுமிவ் விரண்டு பக்ஷங்களும் நீயில்லாத விடத்திலேயே யாம், சருவபாவங்களையும் நீக்கும் நீயிருக்கு மிடத்திலோ பாவிய ரில்லாமையின் முதற் பக்ஷமே யாமெனல்.]

33. அறம்புரிவர் சுரபுரத்தை விழை வின்வழி விமானமதி லணுகிவாழ்வர், மறம்புரிவர் நரகமதின் மடிந்திடுவர் பரவயராய் மலரிப்பேதங், குறும்புசெறி மங்கலமில் புரங்களிலா மெம்மருங்கிற் குயிற்றுலீலே, வெறும்பதகர் நிறை மறத்தை வெறுத்திலையால் கறுத்தவிழி விரித்ததாயே?

(உரை.) புண்ணியர் சுவர்க்கத்தை யிச்சைப்படி விமானத்திற் சென்று வாழ்வர், பாவியர் பரவயப்பட்டு நரகத்தில் துயரப்

படுவர் என்னும் வேற்றுமை பாவியரிருக்கும் தேயத்தேயாம் ; ஏனெனின் மையணிந்து கருணை நிறைந்த திருக்கண்களையுடையதாயே ! ஆண்டுனது லீலைமகா பாதகாது பாவத்தை வெறுக்காம லிருக்கின்ற தன்றோ. நீயிருந்த மிடத்தில் பாவமே யில்லை. (33)

[எல்லா மகாபாதகர் களுமே மரண சமயத்தில் நின்பாற் சரீரத்தை விடுத்தவரா யுத்தம லோகத்தை யடைவரெனல்.]

34. அந்தணர் தமையே கொல்பவ ரநிச மருங்குரு மனைமகட் புணர்வோர், நிந்தைவெண் ணறையைப் பருகுவர் மறித்தும் நிகழ்கன கங்கள விடுவோ, ரிந்தமெய் விடுத்து நின்வயி னளவி லின்கொடை யொடுமகம் புரியு, மந்தணர்க் குயர்ந்தங் காடுவ ரமர ரனைவரும் புகழ்ந் திட வனையே.

(உரை.) ஹே மந்தாகினியே ! நிரந்தரம் பிராஹ்மணர்களையே கொல்பவர், ஆசிரியர் மனைவியையும் மகளையும் தழுவுபவர், கட்

குடிப்பவர், பொன்றிருடுவோர் என்பவர் நின்பாற் றேகம் வீழ்த்திப் பெருந்தானத் தோடுகூடி யாகஞ்செய்யும் பெரியோர் செல்லுமுலகிற்கு மேலுலகிலிருந்து தேவர் போற்ற விளையாடிக் கொண்டிருப்பர். (34)

[பெருந் திருடனும், மனுடருயிரைவாங் குபவனும் ஆகிய வாயுவும், உன்னலைச் சம் பந்த மகிமையானே முப்புவனத்தையும் புனித மாக்குவன் எனல்.]

35. பெறுவதற் கரிய மலர்கண்மா மணத்தைப் பெட்பொடுங் கவர்ந்துமெப் ண் பிரிவா, லறுவகை யுளத்த ருயிரை யுங் கணத்தி லரித்திடு மநிலமு நினது, குறைவறு லீலை தனினசை தரங்கக் கூட்டுற வாற்றிரி புவன,நிறைவுறவிரை வி லகக நற்புனித நிதம்புரிந் திடுஞ் சுதை நிதியே

(உரை.) எவர்கட்குங் கிடைத்தற்கரிய புஷ்பங்களின் மகா மணத்தை அழகோடு திருடி, மனைவியின் பிரிவாகிய வாளாயுதத் தால் அறுக்கப்பட்ட மனத்தர் உயிரையும்

கொடியி லுறிஞ்சும் வாயுவானது உனது குறைவில்லாத விளையாட்டாலசையும் அலைகளின் சம்பந்தத்தால் முப்புவனமெங்கும் விரைவில் ஆச்சரியம்! ஆச்சரியம்!! ஹே அமுதவடிவத்தாயே! அனுதினமும் பவித்திரஞ்செய்யும். (35)

[சிலர் பிறர்காரியந்தேடுபவர், சிலர்புனிதராகிப் பரலோகந் தேடுபவர், அடியேனே இரு உலகபாரத்தையும் உன்மேலேற்றிவிட்டுச் சுகமாகத் துயில்வே னெனல்.]

36. சிற்சில ரிருப்ப ரிகவுல கதனிற் றினமனும் பொருட்பயன் புரிவோர், சற்சனர் சிலவ ரகம்புறங் கழீஇச் சார்தரப் பரவுல கிருப்பர், துற்சனச் சகந்நா தன்னெனு மெளியன் றரிதமா யுலகிரு சுமையைச், சிற்சுக நினில்வைத் துன்றிரு வருளாற் செல்வமே துயிலுவ னினிதே.

(உரை.) சிலர் இகலோக காரியம் பிறர்க்குச்சாதிப்பர், வேறுசிலர் உள்ளும் புறம்பும் தூய்மையுற்றுப் பரலோகம் வேண்டுவர்;

திற்சன ஜகந்நாதனுகிய யானே இரண்டுல கின்பாரத்தையும் நின்னிடத்தில் வைத்து விட்டு நினது திருவருளால் சுகமாகத்துயி லாநிற்பன், ஹே செல்வ அம்மையே! அரு ளுதி. (36)

[ஹே குழந்தாய்! பாவநீக்கப் பொருட்டு என்னைத் துதிக்கின்றனையே, ஆதியிற்பாவ மேசெய்யாதிருக்கலாமே, ஏன் செய்தாயெ னின்? நின்பால்விழுந்த பிணத்தின் அவ யவம் யாவற்றையும் நீ காக்கின்றதேபோல நானும் பாவத்தைச் செய்கின்றேன்; இயற் கையை விடுதல் யாவருக்கும் முடியா தெனல்.]

37. பாமரதமர் பதந்தனில் வீழிற் பரகதி தருநினக் கருளாற், சாமனுஞ் சவத்தினவயவம் புரக்குஞ் சத்தியல் பெறிந்திட முடியா,தாமென வெனச்கு மவக்குழு வதனி லன்பெழு மம்பவிம் பரினி, லோமெவ ராணு மிவ்வியல் பொழிக்க வொண்ணுமோ கண்ணி னுண் மணியே!

(உரை.) பாமரர்களும் மகாபாதகரும் திரு வடியிற் பணிந்த மாத்திரையானே பரகதி யைத்தரும் உனக்குத் தலையயாற் பிணங்க ளின் அவயவம் உன்பால்வீழ்ந்தபோதினும் காக்கும்நல்லியல்பை விடமுடியாததேபோல அடியேனுக்கும் பாவக் கூட்டத்திலன்புண் டாகின்றது. இவ்வுலகத்தில்உறுதியாக எவ ரும் இயற்கையை விடுதல் கூடுமோ. (37)

[ஸ்ரீ கங்கையின் குண்டவத்தை வரு ணித்துத் தனது தாபசாந்தியை வேண்டல்.]

38. பொறிபிர தோடவேளையி னடிக் கும் புரமத னன்திரு லீலை, யெறிச டைத் தடத்தில் வீழ்த லொற்றுமை யா லேகிடுந் தரங்கமெய்ப் புயங்கள், நெறியுற நீண்டங் காடிடத் துளையுண் ணெகிழ்ந்திடு நீர்த்துடி யொலியோ, டிறைவிசெய் நடன மெங்கள்பே ரெரி வை யிரித்துயர் பரத்தை நல்குகவே.

(உரை.) இலக்ஷ்மீகரமாகிய பிரதோடத் தில்ஆடும் புராந்தகன் திருலீலையானது மே லே வீசும் சடைத்தடத்தில் வீழ்தல் வடிவ

சம்பந்தத்தானே செல்லும் அலைகளே புயங் களின் நீட்சியாடல் ஆகவும், துவாரங்களிற் செல்லும் நீர் உடுக்கை யொலியாகவும், ஸ்ரீ கங்காதேவி செய்யும் நடனம் எங்களது பெருந்தாபத்தைக் கெடுத்து உயர்ந்த பரம் பொருளை நல்க வேண்டும். (38)

[எப்போதும் நின்பாலே என் குசலச்சிந் தைப்பாரத்தை வைத்திருந்த என்னை நீ இவ் வாபத்துச் சமயத்தில் விட்டுவிடுவையாயின் இனிமேல் திரிபுவனத்தும் நின்பால் விசு வாசம் எவருமேசெய்யார், நின் கருணையும் ஆதாரவின்றியதாம், என ஸ்ரீ கங்கைக்குப் பயத்தை யுண்டாக்குதல்.]

39. எப்பொழுது நின்பாலே யென் குசலச் சிந்தைபர மேற்றிவாழ்ந்தேன், இப்பொழுதிவ் வாபத்தி லென்னையன் னைநீவிடிஞ்ே யினிதிவ்வன்பு, மிப்புவன மூன்றினின்று மகன்றேடும் வஞ்சகமி லெழிலதான, மைப்படிந்த கட்கருணை மருவலின்றிப் பொன்றிடுமான் மாசி லாளே.

(உரை.) எப்போதும் உன்னிடத்திலேயே என்னுடைய யோக க்ஷேமபாரத்தை வைத்து வாழ்ந்து வந்தேன், இவ்வாபத்துக் காலத்தில் என்னை அன்னையே நீ கைவிடின் இந்த விசுவாசமும் மூன்று புவனத்தி னின்றும் அகன்றோடி விடும், நிஷ்கபடமான நினது கருணையும் பற்றின்மையினுனே அழிந்து போய்விடும். ஹேமாசில்லாததாயே! நினக்குமாசுறல் தகுதியல்ல. (39)

[சிவபெருமானது வாமபாகத்தில் மற்றொருமடந்தை வைகின்றவள் யாரென நோக்க விரும்பிச் சடைக்கொண்டையி னின்றும் சிகைவழியாயிறங்கி யதனுனே ஸ்ரீ பார்வதி தேவியாரால் சக்களத்தித் தன்மையானே திருக்கரத்தாற் றீட்டப்பட்ட நினது தரங்கங்கள் வெற்றி பெற்றுலவுக வெனல்.]

40. பரமசிவன் செஞ்சடைமண்டபத்தினின்றும் பரந்துசிவை யன்புடனே பகிர்ந்துவாழும், பெருமனது விரிமிகவு மிருதுவான பெருங்கேசவேச நெறி பிறங்காநின்ற, வுரமருவு கோமள மெய்க் காந்திவாய்ந்த வுமைபம்மை

மாற்றவளாம் பான்மை யானே, யெரி வெகுளி விழிகள்பொங்கக் கரத்திலீர்க் கு மெழிலலைகள் வெற்றியுற்று வாழ்க தாயே.

(உரை.) சிவபெருமானது செஞ்சடையி னின்றும் வெளிப்போந்து ஸ்ரீ பரமேசுரி பாதிபாகத்தி லன்பாக வாழும் கருணாநிதி யின் சிகைவாயிலாய் வரவும் கோமளமான திருமேனியையும் காந்தியையுமுடைய ஸ்ரீ பார்வதிதேவியார் சக்களத்தியாந் தன்மை யானே கோபத்தோடு கூடிய விழிகள் சிவப் பத்திருக் கரத்தாற் றீட்டப்பட்ட அழகிய அலைகள் விஜயஞ்செய்க. (40)

[அநேகர் உன்னை யடைகின்றனர் அவர் தமிஷ்டத்தை நிறைவேற்றுகின்றாய் என்ப தாகக் காரணமுளது. யானோ இயற்கை யாயேநின்பா லன்புள்ளவனென்பது திண் ண மெனல்.]

41. புகழுறு நினது பதமலர் பரவப் புங்கவர் கங்கையெண் ணரியோர், நிக ழுற விலைகொ லெதுகொடிங் கெனிநோ

நீயவர் விழைவன வளிப்பா, யிகழுறு மெளிய னியற்கையா யேநின் னிருபதம் வணங்கி வாழ்த்திடலாந், திகழ்வினிற் கசிந்து தினமகற் றிடுவன் றிண்ணமுண் ணிகழுமங் கலையே.

(உரை.) ஹே தேவகங்கையே! நினது புகழப்பட்ட பாததரிசனத்திற்கு அநேகர் வருகின்ருரில்லையா வென்? யாது காரணம் பற்றியோ வெனின்? நீ யவர்விரும்பியதைக் கொடுக்கின்ருயன்ருே? அடியேனே சுபாவ மாகவே நினது பாத பத்மங்களை வணங்கி வாழ்த்திக்கொண்டே பொழுதைக் கழிக்கின்றே னென்பது திண்ணமாம். ()

[நினதுமண் ணெனது சோகமுழுவதையும் தூரஞ் செய்கவென வேண்டல்.]

42. களிப்பொடு மூலகர் திலகம தாகக் கதுவுற நெற்றியிற் கதிரோன், றளிர்ப்புறு தருண கிரணமா ருவமை தமந் தணந் திடத்தரித் திடுஞ்சீர், வளப்பொலி யயன்முன் வரைதுய ரெழுத்தின் வழிநொடிப் பொழுதினில் வழிக்கும்,

அளப்பினி னிசைநன் மணின்பொடி
யடியன ளப்பறுந் துயரகற் றுகவே.

(உரை.) சந்தோடத் தோடும் உலகர் நெற்றியில் திலகமாகப் பொருத்தியதும் சூரியனுடைய மிகப் பிரகாசம்போல இருளைப் போக்குந் தன்மையை யடைவதும், வளப்பம் பொருந்திய பிரஹ்மா எழுதிய கெட்ட எழுத்தை நொடியில் மாற்றுவதும், அளவில்லாத கீர்த்தியோடு கூடியதும், ஆகிய நினது மட்பொடியானது அடியேனுடைய மாருத் துயரையெல்லாம் மாற்றுக. (42)

[மூட நரரைப் பரிகசித்துக் கொண்டுந் தன்பாலிருக்கும் வண்டுகளின் மலினத்தை நீக்கிக் கொண்டு மிருக்கும் ஸ்ரீ கங்கா தீர தருக்கள் எனது சகாயமா யுறைகவெனல்.]

43. மாடநிறை தத்தநகர் மத்தமன
மடநரரை மலர்ந்த பூக்கள், கூடிடுதன்
மகிழ்வினுட னகைத்தனெனக் குலவ
நித்தங் குமலமேய்ந்தங், காடிடுநல் லளி
யினத்தை யனவாத மனுமணத்தா லமை

ல மாக்கித், தேடமரர் நதித்தீர முறை தருக்க ணந்துணையாய்த் திகழ்க வின் றே.

(உரை.) மாடங்களுறையும் தமது தமது நகரத்திலேயே பற்றுறுமனத்தராகிய மடையரை நகைப்பதுபோலும் பூக்கள் மலர்ந்து, தன்னிடத் திருக்கும் வண்டுக் கூட்டத்தை நல்ல மணத்தினுலே நின்மல மாகும்படி செய்து விளங்கும், தேவருந் தேடா நின்ற ஸ்ரீ கங்கா தீரத்தருக்கள் நமக்குத் துணையாகுக. (43)

[சிலர் தமதிட்ட பலப்பொருட்டுத் தேவ பூசையையும்யோகத்தையுமாற்றுவர்;யானே நின் னுமஸ்மரணத்தானே அடைய வேண்டிய தடைந்தவனுகி உலகஜாலத்தைத் துரும்பென எண்ணியுள்ளே னெனல்.]

44. அதிகடின சேவை யுறத் தேவரையே சிலர்பூசை யாற்று நிற்பர், நிதி பலர்க ளிசமகத்லதப் பற்றுவர் மற்றைய ரியம நியமஞ் சேர்வர்,சுதன டியனின் னுமந் தனைநினைந்து சுகித்த மெலாஞ்

சுலபமாய்ப் பெற், றதவுலகின் குழுத் திரும்பின் குழுவெனவே திரிபதகை யறிந் துளேனல்.

(உரை.) மிகுந்த கடினமாகிய சேவை செய்து தேவரைப் பூசிப்பர் சிலர், சிலரோ யாகம்புரிவர், சிலரோ யோகம்புரிவர், அடியேனோ நின்னுமத்தையே ஜபித்து எல்லாச் சுகத்தையுமடைந்து ஜகத்தைத்துரும்பென எண்ணி யிருக்கின்றேன். (44)

[ஜன்மம்வரை யெப்போதும் புண்ணியம் செய்யுஞ் சாதுக்கட்கு மேன்மையைச்செய்ய அநேகந்தேவர் சமர்த்துடையரா யிருக்கின் றனர். பற்றில்லாத பாபிகட்கோ உன்னை யன்றி யன்னியர் இதம்புரிபவர் உலகிற் கண்டிலே னெனல்.]

45. பிறந்தது முதற்கொண் டிடைவிடா தறத்தைப் பெரிதுசெய் யறிஞருக் குயர்வைத், திறந்தர வலிய பலசுரரிலரொன் றிக்கிலா தறஞ் செயா திருப்போர்க்,குறந்துணை யுனையே யல்லதிவ் வுலகி லுண்டுகொன் மறுதுணை பெ

ளையீ, சிறந்தமெய் யனேயே யிதகதி கா
ணேன் சிறியனுக் கருடியிக் கணமே.

(உரை.) பிறந்தது முதல் விடை விடாது புண்ணியமே செய்யும் பெரியவருக்குமேன்மையைச் செய்யும் பொருட்டு வல்லமையுடைய அநேகந் தேவரில்லையாவென் ? உண்டு, ஆனல், அநாதையராய்ப் பாவியரா யிருப்பவர்க்கு நீதான் றுணேயே யல்லாமல் வேறு துணையைக்காணேம் ஆதலின், எனக் கருள் செய்வாயாக. (45)

[நின் தீர்த்தத்தைக்குடித்து மூடச்சிநேகரோடும் விளையாடச்சென்ற யான் ஓரிடத்தும் இன்பமடைந்திலேன், இப்போது மென்காற்றுற் சீதளமாய நின் மடியில் கெடு நாட்டுயிலாத என்னைத் துயில வைப்பாயெனல்.]

46. நின்றிருத் தீர்த்தம் பருகிமூடா
மூர்க்க நேயர்க ளொடும்விளை யாடச்,
சென்றதி விரைவி லெங்குமே யோய்
வைச் செறிந்திலன் றயைமிகுந் தாயே,
தென்றனன் றுலவிச் சீதளமான திரு

மடி தனிலினி நெடுநா, ளின்றிய துயில
னாகிய வெனையு மினிதுசெய் துயில
விப் போதே.

(உரை.) உனது தீர்த்தத்தைப்பருகி மகா மூர்க்கரோ டிணங்கி விளையாடித் திரிந்து இளைப்பாறுதலின்றி யுழன்றேன். ஹே தயை மிகுந்ததாயே! இளந்தென்றல் வீசிச் சீதளமான நினது திருமடியிலினி வைத்து நெடு நாளுறங்காத வென்னை உறங்கவைத் தருள். (46)

[என்னைக் காக்கும்பொருட்டு இடுப்புக் கட்டிக் கொள்ளெனல்.]

47. உருள்பெறும் பரம கவின்கொ
ளு மிடையை யொருநொடிப் பொழுதி
னி லிறுக்கித்,தெருள்பொழி நினது மு
குடமீ தரவத் திரள்களா லினநில வ
மைத்தி,யிருள்படு மிதர ரெனப்பொது
வாக வெள்ளுத லொழித்தியென் னனை
யே,யருள்பெறு ஜசங்நா தன்னெனு மெ
னையு மளித்தருட ருணமிப் பொழுதே

(உரை.) தனபாரத்தாற் றளர்வுறும் மிக அழகு பொருந்திய இடையை அதிவிரைவி விறுக்கிக் கட்டிக்கொள்ளுதி. நினது மவுலி யில் நிலவைப் பாம்பின்கூட்டத்தால் கட்டிக் கொள்ளுதி. மற்றைய அஞ்ஞானிகளைப் போல என்னையும் சாமானியமாக நினைக்க வேண்டாம். ஹே பரமேசுரியே! ஜகந்நாத னாகிய எளியேனைக் காக்குஞ் சமயமிதுவே யாகும். (47)

[ஸ்ரீ கங்கையின் திருவடிவைத் துதித் தல்.]

48. உலவுசாரற் காலமதித் தவளமேனி யொடுபிறைவெள் ளரவுபொலி முகு டத்தோடும், வலவைபுகழ் கும்பமொ டம் புயமதேந்தி வரமபயந் தருமரைச் செங் கரங்களோடு,நிலவுசுதைத் தாரை மணி யணிகளாடை நிறைவினெடு வெண்மகர மிசைகுலாவும், புலவர்புக ழம்மைநினை நினைகுவார்கள் புன்மையெ ன்ப தணு வணுகார் புனிதர்வாழ்வே.

(உரை.) விளங்காநின்ற சரத்காலத்தி லிருக்கும் பூரண சந்திரனைப் போன்ற வெண்மையான திருமேனி யோடும், பிறை வெள்ளரவுகள் நிறைந்த மவுலி யோடும், தேவியும் புகழும், கும்பம், தாமரை, வரம், அபயம், என்பவற்ளோடுற்ற நான்கு செந் தாமரைக் கரங்களோடும், அமுததாரையா லாய அநேக ஆடையாபரணங்களோடும், வெள்ளிய மகர மச்சத்தின் மீது எழுந்தரு ளும், புலவரால் வியந்து புகழப் பெருந் தாயே! நின்னை யிவ்வாறு தியானம்புரிபவா ஒருகாலுந் தாழ்மையை யடையார். (48)

[ஸ்ரீ கங்கை யெனது சரீரசுகத்தைச் செய்க வெனல்]

49. புன்னகை பொலியும் வதனத் தொளி பூரணத் தமுதத் தாற்பவ மெ னும், வன்னிவெந்து பொறிந்திடு மைந் தரை வாழவென்றும் வழங்கு மிளங் கொடி, சிந்நவம்பெறு நன்னில வின் குவால் செய்யு மாற்றல் விரித்திடுந் தே மொழி, என்னுடல் விரை வின்புறமுன் பருளிங்கு சந்தனு மங்கல நங்கையே.

(உரை.) புன்னகையோடு கூடிய திருமுகத்தின் பிரகாசமாகிய பூரணாமிர்ததாரையால், குடும்பவன்னியில் அவிந்து கரிந்துபோகும் மைந்தர்களாகிய எங்களை என்றும் வாழுமாறு அநுக்கிரகிக்கும் இளங்கொடி போன்ற தாயே! சின்மயச் சந்திரிகைக்கூட்டஞ் செய்யுஞ் சாமர்த்தியத்தை விரித்தநுக்கிரகிக்கும் இனிய கனிமொழியாய்! என் தேகம் அதிவிரைவில் இன்பத்தையடைய முன் பனுக்கிரகிப்பாயாக. ஹே சந்தனுவிற்கு மங்களத்தை யருளுந்தாயே! அருள் புரிதி. (49)

[சம்சாரச் சுவாலையால் தகிக்கப்பட்ட தேகத்தையுடைய எனது தாபத்தைச்சாந்தி செய்தியெனல்]

50. இந்திரன்ற னுலகமதி லிலங்கிடு வோயலையா லெழிலரியின் பாதமதைப் புனிதமுறப் புரிவோய்! மந்திரஞ்சண் மந்தமுறு மருந்துகளும் பொருந்தா மாகககணம் பயந்தடங்கு மதவமுத ரசமுஞ், சிந்திவிழுங் கருடனைத்தேவதை

யாக்குஞ் சிலேயுஞ் சிதறிவிடும் படியான
பவவனற் பாம்பெறிவா, ஊேந்தவென
தருந்தாபந் தனேயுமிந்த நொடியே நாச
முறப் புரிந்தறிவை நாடிடவு மருளே.

(உரை.) ஹே சுவர்க்கலோக மாதாவே! தங்கங்களால் ஸ்ரீ மகா விஷ்ணுவின் பாதத்தைப் புனிதமாக்குவோய்! மந்திரங்கள் மந்திக்குமாறும், மருந்துகள் வெறுந்துகளாகுமாறும், தேவர் கூட்டம் சேவகர் கூட்டமாகும் வண்ணமும், மதம்பொழி யமுதரசதாரையும், இதம் பொழிய முடியாமலிழியவும், கருடதேவதைக்கல்லும் உருடரும்பொடியாகவும், எழுந்து கொத்திய சமுசாரச் சர்ப்பக்கடிக் கொடிய அனலால்வெதும்பிய அடியேனது பெருந்தாபத்தை இக்கணமே, நசிக்குமாறு செய்து, சந்ததம் பரம சிவத்தியான பரனுயிருக்குமாறு அருள்புரிவாய்.

[ஸ்ரீ கங்காலகரி நடன் கடத்தாண்டவம் எங்களேப் பவித்திரஞ் செய்கவென வேண்டல்.]

51. சூதினில்வா சுகிகரியின் சருமம்
பிர மதராஞ் சுபகணங்க ளக்கமணிநந்தி

யிந்து முதன்மை, யாதியுள வெவற்
றினையுங் கவர்ந் ததன்பின் புரத்தை
யட்டவனுந் தனைத்துரிதம் விலைப்படுத்த
விழைய, ஓதுகருத் துடையவரை யிம
மலையின் குமரியுள்ளெழுந்தபுன் னகை
யொ டுருள்விழியா னோக்கத், தீதி
தென் றுனலைந்தெழுந்தங் காடுகின்ற
தரங்கத் திருநடன்றன் கடநடன
மெனைப் புரக்க தாயே.

(உரை.) ஸ்ரீமகாதேவியார் சூதாடி, வாசுகி நாகத்தையும், யானைத்தோலையும், பிரமத கணங்களையும், ருத்ராக்ஷமாலைகளையும், நந்தியையும், சந்திரனையும், இவைபோன்ற முதன்மையாய பிறவற்றையும் பரித்துக் கொண்டபின், சிரித்துப் புரமெரித்தோன் தன்னையே விலைப்படுத்தியாட விரைவில் முயலுதலைநோக்கி அம்மையார், இனிக் கங்கை நம்வயமாவள் என்னுங்கருத்துடைய ராய்ப் புன்சிரிப்போடும் மேலேபார்க்கத் தீங்குவந்ததென்றருண்டு அலைந்தெழுந்து ஆடும் நினது தரங்கக் கூத்தாடியின் சிரத்

திற் குடம்வைத்தாடுங் கூத்தானது அடியேனைக் காத்தருள்க. (51)

[முடிபுரையாகத் தன்னங்கங்களை நிருமலப்படுத்தப் பிரார்த்தித்தல்.]

மன்மதத்தெறு சித்துரு வுத்தம மத்தகந் தனிற்புத் தழகே செயும், பன்மலர்தரு மன்பரை மன் பெரும் பாடுவாடிடவே நொடி யாடிடும், நன்மனக்கினி தாகி யினிதினும் நாடிமேல் விளையாடிடுஞ் சீகரச், சின்மயச் சிவ கங்கையெனதங்கஞ் செய்க நின்மல மென்மல நீங்கவே.

(உரை.) மன்மதனைப் பொடிசெய்த அறிவுருவமாகிய பெருமானது உத்தமமாகிய திருமுடியில் நவநவமாக அழகைச் செய்வதும், அநேகவகைப் புஷ்பங்களை யெடுத்தருச்சிக்கும் அன்பரையணுகுந்துயர் யாவற்றையுங் களைவதும், அதிமனோகரமாயதும், உயர்ந்தெழுந்து விளையாடுமலைகளோடு கூடியதும் ஆகிய சின்மயச் சிவகங்காதேவி

யடியேனது அங்கங்களின் புன்மலம்போ
மாறு நின்மலஞ் செய்தருளுக. (52)

வாழ்த்து.

பண்டித ராஜ னென்னப் பகர் ஜகன்
னாததேவன், விண்டவித் துதியை வீர
வேதியன் பாதம் போற்றித், தண்டமிழ்
வைத்தே னித்தைத் தடையறப் படித்த
பேர்கள், எண்டிசை தனினு மின்ப மெய்
தியே வாழ்வர் வாழி.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்ரீ கங்காலகரி முற்றிற்று.

நூல் வரலாறு.

மல்லிகையின் வனநிறைந்த தில்லி மகா நகரின் மயிலிருக்கை தனிவிருந்த மன்னன்மகண் முலேயைப், புல்லிநெடும் போகமிகப் புசித்தபெரு மாசைப்போக் கிடநற் காசிநகர்க் கரையிலிருந் தரிதாய்ச், சொல்லிடயிக் கங்கை லகரியினைக் கவிமுறைக்கோர்தோற்றுபடியேறிமெல வந்துமந்தா கினியாள், நல்லஜகநாதவித் வத் திறையவனே நாடிநக சிகையை நனைத்தருளி நண்ணினஞானிலத்தே.

டில்லிமகா நகரிலிருந்த ஸாஜிகான் என்னும் மன்னவனோடு பண்டிதராஜர் வாழுங்கால் ஒருதினம் தன்மகளைப் பாத்சா தண்ணீர் கொண்டுவரும்படி யேவ, லவங்கியென்னு மப்பெண்மணி தங்கக்கும்பத்திற் றண்ணீர்கொண்டுவர, அதை வருணிக்குமாறு வேண்டியபோது வருணித்த சுலோக சாதுர்யத்தைக்கண்டு பண்டிதராஜர் விரும்பிய லவங்கியை விவாகஞ்செய்து கொடுப்ப, அவளோடு ஸ்ரீ காசியையடைந்து பண்டித

ராஜரை மறையவர் அவமதிப்ப, 52 - படியின்கீழிருந்த ஸ்ரீ கங்காதேவியை இத்துதியாற் பிரார்த்தித்தபோது சுலோகந்தோறும் ஒவ்வொருபடி யேறிவந்து அம்மையார் புனிதமாக்கினு ரென்ப.

உ

ஓம் மகாகணபதயே நம:

ஸ்ரீ காவிரிப்பதிகம்.

திங்கட் செஞ்சடைத் தியாகனுர்க் கினிய கா விரியே, புங்கவர் புகழ் பொன்னுல கெழுந்தபே ரமுதக், கங்கையு நின்றன் வயின்வந்து மூழ்கியே களங்க, மிங்கறுத் திடு மெனினின திசையெவ ரிசைப்பார்.()

வாரிதி பெய்தநல் வயிற்றினன் கொலோ, பாரிதைத் தன்பெரும் பண்டியிட் டான்கொலோ, நேருனைப் பயந்தவர் நீடு கூறுவாய், சீரெனக் கருடருஞ் சிறந்த தேவியே. (2)

அளவறு சிவன்ற னுலய மரியி னுலய மானைமா முகன்றன், களவறு மூமையின் கந்தன்றன் கோயில் கணக்கிலா தவைநின் றன் கரைமேல், இளவெயிற் பதும மென விளங் கிடல்போ லெங்நிக் கரையி லா மூரையா யுளமறுத் தெனையு மறிவினி னிறுவு முத்தமி நித்தகா விரியே. (3)

எத்தனை பெயர்க ளெத்தனை பிரிவி லெத்தனை யுயிர்களைப் புரத்த, லத்தனுக் குனது பிரியமே நோக்கி னம்பிகை கங் கையி லணுவே,யுத்தமரான மூவரு முறையி லுனையலா தேவரைப் புகழ்ந்தார் சித்தம திரங்கி மத்தனை யாண்டு சீரினைக் காவிரி யருளே (4)

நின்வயி னிருந்த மணற்கண மியாவு நித்தமெய்ப் பாசிவ னிலிங்கந், தன்வயி னிறங்கல் தகுங்கொலோ வெனமுன் றன் மனை கடிந்தமா தவன்றன், புன்வய லுழுத செருப்பினைத் தலையிற் பொருத்தியே யர தத் தராடி, லென்வயிற் புகழ்த லென்கொ லாங் கருணை யெழில்கொழி காவிரித்தாயே.

கோவணனுகி நின்கரை யடைந்த கோ ளிலா மைந்தனைப் புரத்தல், ஆவவுன்றனக் கிங் கருமையோ வன்னே யருஞ்சதா சிவப் பிரமத்தை,யாவலை விடுத்த தக்கிணு மூர்த்தி யையனை யனையமா தவரைத், தேவிநீ புரந்து பயின்றவ ளன்றோ திருச்சுதன் மறுத்ததா யுளபோ. (6)

வாசனை மிகுத்த மனத்தனேயெனினு மங்கையர் வாஞ்சைய னெனினு, மாசனைத் திருத்தி யாண்டிடி னிதமு மாகரும் புகழ்வ ருன்புகழை, பேசுறு களங்க னெளியனைப் போலப் பெற்றிட வுலகினிற் கரிதே, நீ செயிங் நிமிட மாதலிற் புனித நின்மலக் காவிரி யனையே. (7)

சந்தன வடிவி புகுந்துமா கரியைச் சங்தொடுங் தரளவா மரவைச், செந்திருத் திரையி லொதுக்கியே யாடுஞ் செல்வியே கல்வியே பயிலா, மைந்தனுன் பதத்தைப் பணிந்தனன் மடியில் மலர்த்தவி சினினினி திருத்திப், புந்தியை யடக்கிப் பூரணமாகிப் புத்தமு தயின்றிட வருளே. (8)

காமமே முதலாம் பெரும்பகை கடிந்து
கரமதே பயிக்க பாத்திரமாய்ச் சேமமேயாய
நின்கரை யிருந்து செபித்தெழுத் தைந்தையு
மனத்திற், பூமமெய் யுருவேயாவுமென் றறி
சம் பூரண வறிவுரு வாகி, நீமன வடியற்
கருளுநா ளென்றோ நிகர றுங் காவிரியம்மே.

காவிரி யனையே போற்றி! களங்கமில்
தேவீ போற்றி! நீவிரி தலங்க ளெல்லா
நித்தியம் வாழ்க போற்றி! மூவரும் புகழுந்
தியாக முன்னவ மன்னன் மன்னும் தேவ
ருஞ் புகழு மாரூர்ச் செல்வியே போற்றி!
போற்றி! (10)

ஸ்ரீ காவிரிப்பதிகம் முற்றிற்று.

சுபம்! சுபம்!! சுபம்!!!

உ

பெரிய ஞானவாசிட்ட வசனம்.

இதன் விலை:—இவ்வருடம் பங்குனிமீ வரை செலுத்தில் தபாற் சார்ச்சுட்பட ரூபா 20-0-0, சித்திரைமுதல் கூடி ரூபா 25-0-0. 4-மாதத்திற்கொருமுறை ரூ 1-4-0. செலுத்தின் 16-பாரமனுப்பப்படும்.

ஞானஜீவவாதக்கட்டளை பெரியவியாக்கியானம்.

இதன்விடய அட்டவணையே 32 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளன.

715 பக்கங்கொண்ட இது (பயிண்டு) விலை 1-8-0. பயிண்டின்றி 1-0-0. தபாற் சார்ச்சு தனியாம்.

சர்வவேதாந்தசாஸ்திர சித்தாந்தலேசசங்கிரகவசனம்.

ஸ்ரீ வீர. சுப்பய்யசுவாமிகள் மொழிபெயர்ப்பு

இது ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷித சுவாமிகளால் செய்தருளப்பட்டது. இதன்கண் ஸ்ரீமத் பாடியும், வார்த்திகம், விவரணம், என்பன முதலிய அனேக நூல்களைத்தொகுத்து 45 விடயங்கள் அருளப்பட்டுள்ளன. இதுவே விருத்திப்பிரபாகர 7-வது, 8-வது, பிரகாசங்களின் மூலமாம் விலை 1-0-0.

தாசரத்தாலாட்டு மூலமும் உரையும். ரூபா	0-4-0.
சமஸ்கிருத முதற்புத்தகம்	1-0-0.
ஸ்ரீதக்ஷிணாமூர்த்திசுவாமிகள் சரித்திரம்	0-4-0.
ஸ்ரீசங்காலகிரி மூலமும்உரையும்	0-2-0.

இங்ஙனம்.

சுவாமிநாதசுவாமிகள்,

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் மடாலயம்.

மடப்புரம், திருவாரூர் போஸ்டு. (S. I. R.)